# கண்ணனின் மாமா

பெற்றவளுடனேயே சுற்றுகிற வயசு, கண்ணனுக்கு. சாண்பிள்ளையென்றாலும் அவனை லலிதா துணை சுட்டிக்கொண்டுதான் போவாள் கடைக்கு. கடை என்றால் அது எங்கே இருந்தது? அவர்களுடைய வீட்டின் சுற்றுச் சுவரை ஒட்டித்தான் இருந்தது. கடையைச் சார்ந்த சிறிய கதவொன்று உண்டு. கைக்காரியத்துடனேயே அந்தக் கதவை அணுகித் தேவையானதை வாங்குவாள் லலிதா. மிகவும் அவசியமென்றால்தான் அவள் போவாள். போகும்போது, "வாடா என்கூட" என்று இந்தப் பிள்ளையைக் கூட்டிப் போவாள். இப்படிச் சில சமயங்களில் சென்ற பிறகுதான் கண்ணன் கடைமேல் கண் வைத்தான். மெல்ல மெல்லப் போவான். எட்டிப் பார்ப்பான். தயங்கி நிற்பான். ஆவல் காட்டுவான்.

குறுகுறுத்த முகத்தினனான பாலகனை அழைத்துப் பேச யாருடைய தூண்டுதல் வேண்டும்? நல்ல தின்பண்டமாக ஒன்று எடுத்து 'இந்தா' என்று நீட்டினார் பஞ்சாட்சரம். ஆவல் உந்தினாலும், தயக்கம் பின்னுக்கு இழுக்கவே, கண்ணன் அசையவில்லை பஞ்சாட்சரம் கதவின் வழி இறங்கி அவனுடைய சின்னக் கையில் சாக்லேட்டை வைத்தார்.

அன்று தொட்டுத்தான் பஞ்சாட்சரம் கண்ணனுக்கு மாமா உறவானார். அப்புறம் பயல் அடிக்கடி மாமாவை நாடினான். இதில் ஆச்சரியம் என்ன? குழந்தைகளுக்குத் தீனியில் தான் கருத்து. அது எங்கே கிடைத்தாலும் அங்கே உறவு ஒட்டும். தினந்தோறும் அவர் வரும் வழியைப் பார்த்து நின்றான். பஞ்சாட்சரம் இந்த வீட்டின் தலைவாசலில் நுழைந்துதான் முதலில் வருவார். இடது புறம் நாலு தப்படி நடந்து கடையின் சின்னக் கதவைத் திறந்து உள்ளே போவார். கண்ணாடிக் கதவுகள் பொருந்திய மரச் சாமான்களுக்கிடையே புகுந்து போய் உள்தாழ்ப்பாளை நீக்கி, முன் வாசலை விசாலமாகத் திறந்து வைத்து, கடையை வியாபாரத்திற்குத் தயாராக்கி, இந்தப் புறம் திரும்பினாரானால், கண்ணன் வியப்புடன் பார்த்து நிற்பதைக் காண்பார். உடனே முறுவல் அரும்ப அவனுக்கு ஏதாவது தின்பண்டம் தருவார்.

திடீர் திடீர் என்று ஒவ்வொரு நாள் அவர் வரவேமாட்டார். கடை திறக்காது. கண்ணனுக்கு ஒன்றும் கிடைக்காது. மாமா இப்படிச் செய்கிறாரே என்று துக்கம் வரும் அவனுக்கு. இரண்டு மூன்று தடவைகள் இந்த ஏமாற்றம் வந்ததும் தாங்கவில்லை.

"நீ ஏன் நாளைக்கு வரல்லே?" என்று முதற் கேள்வி கேட்டான்.

"நேற்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா? அதனாலே வரவில்லை" என்று சிரித்தபடியே சொன்னார் அவர்.

"நீ சும்மாச் சும்மா வர மாட்டேங்கிறே!"

"சும்மா சும்மா வரவில்லையா நான்? ஞாயிற்றுக் கிழமைதான் எனக்கு லீவு; மற்ற நாளெல்லாம் வருவேனே!"

"இனிமே தினோம் வருவியா மாமா?"

"இன்னும் ஆறு நாள் தினம் வருவேன். அப்புறம் ஞாயிற்றுக்கிழமை வரும். அன்றைக்கு வரமாட்டேன். அதற்கப்புறம் வருவேன்."

"ஞாக்கிம்மை வேண்டாம், நன்னால்லே."

"எனக்கு வேணுமே!"

"வேண்டாமே; நீ தினம் வரணும்."

"உங்கள் அப்பா நேற்று ஆபீஸ் போனாரா? நேற்று மத்தியான்னம் அப்பா வீட்டிலே தூங்கவில்லை?"

"தூங்கினா; நான்கூட அப்பாகிட்டத் தூங்கணும்னேன்; போச்சொன்னா,"

"பாவம், அப்பா தினம் ஆபீஸ் போகிறாரே! ஒரு நாள் வீட்டிலே இருக்க வேண்டாமா? எனக்கும் லீவு வேண்டாமா? எங்கள் வீட்டிலே இருக்க வேண்டாமா?"

"இதுதானே வீடு?"

"இதுதான் எனக்கு ஆபீஸு. ஞாயிற்றுக் கிழமை ஒரே ஒரு நாள் நான் வரக்கூடாது. மற்ற நாள் வருவேனே; உனக்கு மிட்டாய் தருவேனே! இந்தா."

கண்ணனுக்குத் திருப்தி அப்போதைக்கு உண்டாயிற்று. பொல்லாத ஞாயிற்றுக்கிழமை அவனுடைய வாயில் சிக்காமலே கருத்தில் புகுந்து கொண்டுவிட்டது; குடையவும் தொடங்கிவிட்டது. எப்படித் திருப்தி நீடிக்கும்?

அதன் உச்சரிப்பை அவன் கற்கவில்லை; அதன் நச்சரிப்பு மட்டும் அசாத்தியமாக இருந்தது. அம்மாவை 'மாமா ஏன் வரவில்லை?' என்று கேட்ட பொழுதெல்லாம் அவள் இந்த 'ஞாக்கிம்மை' தான் காரணம் சொன்னாள். அதை நம்பவில்லை, ஏற்கவில்லை; இப்பொழுது மாமாவே சொல்லும்பொழுது; ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஒரு வார்த்தை அடிக்கடி அவன் செவியில் விழுந்ததுண்டு. அப்பொழுதெல்லாம் அதன் கடுமை தெரியவில்லை. இன்று தெரிகிறது, மறுபடியும் எப்பொழுது வந்துவிடுமோ அது?

"இனிமேல் வராது; வரவே வராது; மாமா தினமும் வருகிறாரே" என்று கண்ணனுக்கு வந்துவிட்டது நம்பிக்கை. அந்தச் சமயத்தில், ஐயோ, அவர் வரவில்லை!

"ஏண்டா வழியைப் பார்த்துப் பழியாய் நிற்கிறாய்? இன்றைக்கு மாமா வரமாட்டார்" என்று அதிர்வேட்டுப் போலப் பேசினார் அவனுடைய தாத்தா.

"ஏன் வரமாட்டா?"

"ஞாயிற்றுக்கிழமையல்லவா? கடை திறக்கமாட்டார்' அதிர்ந்துபோய் மௌனியானான் கண்ணன்.

'நாளைக்கு வருவார்; இப்போது பார், ஒரு ரகசியம்." குரலைத் தாழ்த்தினார் தாத்தா. "பாட்டி தேங்காய் துருவிக்கொண்டிருக்கிறாள் போ" என்றார்.

ஓடினான் கண்ணன். துருவுணையை அலம்பிக்கொண்டிருந்த பாட்டி, பேரன் வருகிறதற்குள் துருவி முடித்த பூரிப்பில் இருந்தபோது, 'தேங்கா!" என்று கூவிக்கொண்டு போய்ச் சேர்ந்தான்.

"யாரடா சொன்னார் உனக்கு?"

"தாத்தா சொன்னாரே, தா."

"இருடா. மேலே படாதே; தந்து விடுகிறேன். கலகத்தைப் பார்!" சிட்டிகை துருவல் தந்தாள் பாட்டி.

"இன்னும் வேணும்; இன்னும்..."

போதுமாடா, போ; வயிற்றிலே செருகும். உங்கள் அப்பா சாப்பிட வந்துவிடுவான். ஓரியாடாதே போ; இந்த ஒரு ஞாயிற்றுக்கிழமையாவது பறக்காமல் சமைப்போமென்றால் முடிகிறதில்லை; ஹூம்!"

பாட்டி சொல்வதைக் கவனித்துவிட்டு, 'என்னவென்று சொல்கிறாள்?' என்று யோசித்தபடி விளையாடப் போய்விட்டான் கண்ணன்.

மறுநாள் 'மாமா'வைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு, "ஏன் நீ வரல்லே?" என்று வினவினான். 'நாளைக்கு' என்பதா, 'நேற்று' என்பதா? அதற்காக இப்படிக் கேட்டான்.

"நேற்று லீவு அப்பா!" என்று அவர் கெஞ்சினாற்போல் கூறினார். இன்றைக்கு மீண்டும் அவன் கேள்விகளுக்கு விடையளிக்க வேணுமே!

முந்தின வாரம் விளக்கினபடியே இப்போதும் சொல்ல முற்பட்டார். என்னவோ தோன்றிற்று. கண்ணனைக் கடைக்குள் கூப்பிட்டு, பக்கத்தில் வைத்துக்கொண்டு சிறிது யோசித்தார். திங்கள் தொடங்கி ஏழு வாரங்களின் பெயர்களையும் சொல்லி, அவனையும் சொல்லச் செய்தார். பிறகு மேஜைமேல் வைத்திருந்த கண்ணாடி ஜாடிகளை இடம் மாற்றி வைத்தார்.

"எங்கே சொல்; திங்கள் - திராட்சை! செவ்வாய் - சீரகம்! புதன் - பிஸ்கோத்! வியாழன் - வாதாம்! வெள்ளி-வெள்ளை! சனி-சாக்லேட்; ஞாயிறு - இல்லை! இந்தப் பாட்டுக் கற்றுக்கொள்" என்றார். அவன் புரிந்து கொள்ளக் கஷ்டப்பட்டான். எப்படியும் செயலில் காட்ட வேண்டிய திட்டம். அதனால் அவரும் சிரமப்படவில்லை. அவன் கையில் திராட்சையை வைத்து அனுப்பினார். மறுநாள் அரிசிபோல மெல்லிதாயிருக்கும் சீரகப் பெப்பர்மிட். இப்படி, சனிக்கிழமை சாக்கலேட்டையும் தந்தார். "சாயங்காலம் வா" என்றார். கண்ணன் மறக்காமல் போனான். தினமும் நாலு நடை போகிறவனாயிற்றே; "இதை நாளைக் காலையில் தின்னு. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமையல்லவா? வரமாட்டேன்; இதை வைத்துக்கொள்" என்று சொல்லிப் பல நிற வர்ணங்களாக ஐந்தாறு நிலாமிட்டாய்கள் கொடுத்தார். அவருக்கு எதிரில் ஊங்கொட்டி விட்டு வீட்டின் வலப்புறம் சிமிட்டித் திண்ணைக்குப் போய் உட்கார்ந்தான் கண்ணன். ஒன்றே ஒன்று முதலில் தின்றான். பிறகு இன்னொன்று; அப்புறம் மற்றொன்று; மூன்றாவது தின்னும் பொழுது, முல்லைப்பூப் பறிக்க வந்துவிட்டாள் லலிதா "ஏண்டா, சாயங்காலமும் கொடுக்க ஆரம்பித்துவிட்டாரா மாமா? அடபாவமே!" என்றாள்.

"நாளைக்கி ஞாகெம்மையே!"

"ஓஹோ" என்று சிரித்தாள் லலிதா. சிரித்தாளே தவிர மனத்தில் சட்டென்று ஓர் உறுத்தல். பாவம், பஞ்சாட்சரம்! தம்வீட்டுக் குழந்தைகளுக்கு இந்தச் சலுகை கொடுப்பாரோ சந்தேகந்தான் குடிக்கூலிக்கு இந்த மோட்டார் லாயம் கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் வீட்டுப் பிள்ளையாயிற்றே என்ற நன்றி இருக்கலாம். நன்றி எதற்கு? களையாய் இருபத்தைந்து ரூபாய் வாடகை தருகிறார். கண்ணன் பெறுகிற இலவசத் தீனி அவருக்குப் பிரமாதமாக இராதோ என்னவோ! ஆனால் தினமும் பயன் பெறும் சலுகையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதற்கு அவளுக்கு உரிமை இருக்கிறதா?

"போகாதே" என்று தடுக்கலாம். மறுநாள் கடை திறக்காதென்று இன்றைக்கே அவர் கொடுத்து வைத்திருக்கிறாரே; இந்த அன்பை முறிக்கலாமா?

"போக்கிரிப் பயலே! மாமாவை நன்றாய் மயக்கியிருக்கிறாய்!" என்று கொஞ்சிவிட்டு, "இதை நாளைக்குத் தின்னு; இப்போது கூடாது" என்று மீதி மூன்றையும் பிடுங்கி வைத்தாள் லலிதா.

மறுநாள் அவற்றைத் தந்தாள். கண்ணனும் தின்றான். ஆனால் தின்ற மாதிரி தோன்றவில்லை; மனம் நிறையவில்லை.

இதுதானே உயிர்களின் இயல்பு? முதல் தேவை உணவு; அது கிடைத்துவிட்டதோ, மீண்டும் அது கிடைக்காதவரை, உணவு லட்சியம் இல்லை. பசி, பஞ்சம் என்று வந்ததோ, பிறகு உணவு தவிர மற்ற எதுவும் லட்சியம் இல்லை.

கடை மாமாவிடமிருந்து தீனி கிடைத்த புதிதில் கண்ணனுக்கு அவர் தரும் பொருள் மேல்தான் நாட்டம். பிறகு அவருடைய கனிவுப் பார்வையும் அன்பு மொழியும் அந்தப் பொருள்களைவிட முக்கியம் என்று தோன்றின. இந்த ஞாயிற்றுக்கிழமை காலை மிட்டாய் கிடைத்தது. உண்மை. ஆனால் மாமா வரவில்லையே! கதவின் பக்கத்தில் சென்றால் பூட்டுத்தான் பயங்கரமாகத் தோன்றுகிறது.

இந்த ஞாயிற்றுக்கிழமை ஏன் தான் வருகிறது? சீசீ, எதற்காக அது ஒன்று வர வேண்டும்? ஐய, எப்படித்தான் வருகிறதோ!

ஞாயிற்றுக்கிழமை என்றால் அன்றைக்கு உலக நடப்பில் ஏதோ மாறுதல் நடக்கிறது என்பதைக் கண்ணன் உணர்ந்தான். "இன்றைக்கு ஏது தபால்? நாளைக்குத்தான் பதில் வரும்" என்று அவனுடைய தந்தை பாட்டியிடம் சொன்னபோது கண்ணன் சட்டென்று, "இன்னிக்கு ஞாக்கெம்மையே!" என்றான்.

"அட தேவலையே!" என்றார் தந்தை.

"பஞ்சாட்சர மாமா வரவில்லை என்ற குறிப்பாக்கும் இவனுக்கு; அவர் உனக்குச் சொல்லித் தந்த 'திங்கள் - திராட்சை' சொல்லு!" என்று கொஞ்ச வந்தாள் லலிதா. கண்ணன் வாசலுக்கு ஓடிவிட்டான்.

எதிர் வீட்டில் ஒரு மாமா இருக்கிறார்; அவர் தினமும் கறுப்புக் கோட்டு அணிந்து காரில் ஜம்மென்று போவார் இந்த ஒரு நாள் போகமாட்டார். போனாலும் கறுப்புக் கோட்டுப் போட்டிருக்கமாட்டார். அவர் காரில் இன்னொரு நாள் போக மாட்டோமா என்று கண்ணனின் ஆசை. ஆமாம், ஒரே ஒரு நாள் போனான். தம்பிப் பாப்பா பிறந்தானே, அன்றைக்கு. போகும்போது அம்மாவின் நினைப்பினால் ஏக்கம்; வரும்பொழுது தாயின் பக்கத்தில் ஒண்டியிருந்த பாப்பாவை நினைத்துத் துக்கம்; ரசித்ததா கார் சவாரி? பாவம்! தம்பிப் பாப்பா நல்ல பாப்பாதான். தீனியில் பங்கு கேட்க வரவேமாட்டான். இவனாகத் தந்தாலும் 'ஆ, ஊ!' என்று தடுக்கிறார்கள்.

தம்பிப் பாப்பாவைக் கூட அப்பா ஞாயிற்றுக்கிழமைதான் எடுத்துக்கொள்கிறார். ஆமாம், அப்பாகூட அன்றைக்கு ஆபீஸ் போகமாட்டார். மாமா சொன்ன மாதிரி, தூங்குவார். தூங்கி எழுந்ததும் சுடச் சுடத் தோசை தின்பார். பாட்டிகூட ஏதோ சொல்வாளே; ஓஹோ! நினைவு வந்துவிட்டது. கண் சரியாயிருக்க வேண்டும் என்று பாட்டிக்கு விரதமாம்; ஞாயிற்றுக்கிழமை ராத்திரி சாப்பிடமாட்டாள். சாயங்காலம் தோசை சாப்பிட்டுவிட்டு, 'போதுமடியம்மா' என்று எழுந்துவிடுவாள். தாத்தாவுக்கு இதெல்லாம் கிடையாது. எப்போதும் ஒரே மாதிரி. அண்ணா ஞாயிற்றுக்கிழமை என்றால் அப்பாவை அங்கே அழைத்துப் போ, இங்கே கூட்டிப் போ' என்பான். அம்மாவும் சில சமயம் சண்டை பிடிப்பாள்.

இப்படி ஏன் மாறுபட்டு வருகிறது ஒரு நாள்? அடிக்கடி, அதாவது ஆறு நாளுக்கு அப்புறம், வருகிறது. சில காரியங்கள் மற்ற நாட்களிலும் மாறுகின்றன. ஆனால் ஞாயிற்றுக் கிழமை என்ற தனிக் குறிப்போடு சில காரியங்கள் நிகழ்வது ஏன்?

கண்ணனுக்குச் சரியாக விளங்கவில்லை; ஆனால் விஷயம் சுவாரசியந்தான் என்று நினைத்தான். அவனுடைய சிற்றறிவில், மழை நாள், குளிர் நாள், கோடை நாள் என்ற இயற்கை மாறுபாடுகளைப்பற்றிக் கவனம் பதியவில்லை. உள்ளூற எங்கேயோ ஓர் ஐயப்பொறி அவற்றைப் பற்றி இருந்தாலும், அந்தப் பொறி பற்ற இன்னும் கொஞ்சம் நாள் போக வேண்டும். இப்போது கண்முன் நின்ற விஷயம் இந்த 'ஞாயிற்றுக்கிழமை' தான்.

கண்ணனும் பெரியவனாகிறான் என்று காட்டுவதற்கும், அவனுடைய அநுபவத்தை விசாலமாக்குவதற்கும் இன்னொரு பெரிய மாறுதல் வந்தது. அவனுடைய அப்பாவுக்கு லீவு. நிறைய நாள் லீவாம். அண்ணனையும் கண்ணனையும் அழைத்துக்கொண்டு அம்மாவும் அப்பாவும் ஓர் ஊருக்குப் போனார்கள். அங்கே போனால் அங்கேயும் ஒரு தாத்தா பாட்டி. அங்கேயும் ஒரு மாமா; மாமியும் ஒருத்தி வீட்டோடே. இதற்குமுன் அவர்களைப் பார்த்த மாதிரி ஒரு நினைவு அப்புறம் தோன்றினாலும், "இவர்கள் யார்? எங்கே வந்தோம்? வீடு, தெரு எல்லாம் வித்தியாசப்படுகின்றனவே!" என்று கண்ணனுக்குப் பலத்த யோசனை.

ஒருநாள் லலிதா, "நான் எப்போது வந்தேன்?" என்று கேட்டபடி காலண்டரை எடுத்து, "செவ்வாயோடே செவ்வாய்" என்று ஆரம்பித்ததும் கண்ணன், "நீ சொல்லாதே; அழுவேன்" என்றான். அவனுக்கு என்னவோ தோன்றிவிட்டது. அவனுடைய ஏக்கம் யாருக்கும் தெரியவில்லை.

"திங்கட்கிழமை காலையில் போய்ச் சேருவோம்; பத்து மணிக்கு ஆபீஸ் போகவேணும் அவர்கள் அப்பா" என்று லலிதா சொன்னபோது கண்ணன், "மாமா கடையிலே திராட்சை தின்பேன்" என்றான்.

"அட போக்கிரி! மறக்கவில்லை நீ! ஏண்டா, போய்ச் சேர்ந்ததும் தாத்தா பாட்டியோடு நிறையப் பேச வேண்டாமோ? மாமா வருகிற வழி பார்த்து நிற்பாயா? இந்தப் பாட்டி தாத்தா வாங்கித் தந்ததையெல்லாம் காட்ட வேண்டாமோ?"

"ஓ, மாமாவுக்குக் காட்டுவேனே!"

"தாத்தா பாட்டிக்கும் காட்டுவாயா?"

"உம்." காட்டினால் போகிறது என்றுதான் நினைப்பு.

எல்லாரும் ஊர் திரும்பப் புறப்பட்டார்கள். வீடு நெருங்கியபோது கண்ணன், "மாமா, திராட்சை" என்றான். "இன்றைக்கு வரமாட்டார்; ஞாயிற்றுக்கிழமை; நாளைக்கு வருவார்" என்றார் அவன் தந்தை.

"நாம் நாளைக் காலை வருகிறதாகத்தானே இருந்தோம்?" என்றாள் லலிதா.

"ஹுஹும், சொல்லுவாய், பிறந்தகத்தை விட்டு வரத் தோன்றுமா, அதுவும் நானும் உடன் இருக்கும்போதும் நான் போட்ட அதட்டலில்தானே கிளம்பினாய்? எனக்குத்தானே கண் விழிப்பு ரெயிலில் என்று உனக்கு ஏன் முதலில் தெரியவில்லை? நான் மத்தியான்னங்கூடப் படுக்க முடியாமல் வந்ததும் ஆபீஸ் ஓடவேணும் என்றாயேடியம்மா!" என்று என்னவோ கோபமும் சரஸமுமாகச் சொன்னார். கண்ணனுக்கோ மாமா வராத தினமாக வந்தோமே என்று வருத்தம். ஆனால் வீட்டிற்குத் திரும்புகிறோமே என்று மகிழ்ச்சியும் நிறைய இருந்தது.

பாட்டி தாத்தாவுடன் குசலம் முடிந்தது. அவன் போகிற திகசைப் பார்த்த பாட்டி, "மாமா வரமாட்டாரே அப்பா; இந்தா நான் தருகிறேன் அப்பிச்சி. உனக்காகத்தான் பண்ணி வைத்தேன் நேற்று" என்று சொல்லி அவனுடைய கை நிறைய நாலு வெல்லச் சீடைகளை வைத்தாள்.

மென்றுகொண்டே போய்க் கடையின் கதவண்டை அவன் நின்றான். அருகில் இருந்த மணத்தக்காளிச் செடியில் நிறையக் காய்கள் தொங்கின. சிவப்பான பழங்கள் வேறு நிறைய; அவன்தான் இருக்கவில்லையே பறிப்பதற்கு. ஆஹா, பல நாளாகப் பார்க்காத செடி கொடிகள்!

அண்மையில் காலடியோசை கேட்டது. மாமா! மாமா வந்துவிட்டார்.

"என்னடா கண்ணா?" என்றார் அவர். பேசத் தோன்றாமல் விழித்தான் கண்ணன்.

"மறந்துவிட்டாயா ஒரு மாசத்திலே?" அவர் குரல் பரிதாபமாகத்தான் ஒலித்தது.

இன்னிக்கு ஏன் வந்தே?"

"நீ வந்தாயே என்று வந்தேன்."

"இன்னிக்கு என்ன தருவே மாமா?"

"எல்லாம் தருகிறேன் வா."

இன்னிக்கு எப்படி வந்தே?"

"அட சமர்த்துப் போக்கிரி; இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையாயிற்றே என்று கேட்கிறாயா? சொல்கிறேன். வா."

குழந்தைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடம் திறக்கும் சமயம். கடையில் வியாபாரம் மும்முரமாக இருக்கும் புதுப் புத்தகங்கள் வாங்குவதற்குக் கையில் பட்டியலும் நெஞ்சில் பெருமிதமுமாக வருவார்கள். ஏட்டியும் போட்டியும் சிநேகமும் உறவுமாகப் பல சமயங்களில் பல விதமாக வருகிற பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பதில் சொல்லத் திணற வேண்டிய வாய்ப்பு இது. ஞாயிற்றுக்கிழமை என்று வீட்டில் குந்தியிருக்க முடியுமோ?

இந்த விளக்கம் கண்ணனுக்கு அவசியம் இல்லை. அவனுக்கு அவருடைய அன்பு, உள்ளம் நிறையக் கிடைத்தது. தான் ஊர் போய் வந்த புதுமையெல்லாம் சொல்ல ஆசைதான். நாக்குத்தான் அத்தனை வளரவில்லை. சொன்னமட்டில் திருப்தியுடன், கையில் திராட்சையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

திங்களுடனும் திராட்சையுடனும் துவங்கின மகிழ்ச்சி நீடித்ததா? வீட்டில் நிறைய மாறுதல்கள் புகுந்தன. அவனுடைய சிற்றப்பாவாம், (அப்பா மாதிரி சற்றுச் சாயல் தெரிந்தது) அவர் இருந்தார் வீட்டில். அதைத் தொடாதே, இதை எடுக்காதே என்று கோபிப்பது உண்டு அவர். ஒரே ஒரு சுவையான விஷயம் என்னவென்றால் அவரும் எதிர் வீட்டு மாமா மாதிரியே கறுப்புக் கோட்டு அணிந்து கோர்ட்டுக்குப் போவார். அப்பாவுடைய பெயர்ப்பலகை வாசலில் இருக்கிறதே, அதற்குப் பக்கத்தில் அவருக்கும் ஒரு பலகை. அநேகமாக அவர் வீட்டிலேயே தங்கமாட்டார். தினமும் காலையில் யாரோ ஒரு பெரிய வக்கீல் வீட்டுக்குப் போகிறாராம் இந்தச் சிற்றப்பா தேவலை என்று தோன்றிவிட்டது! திடீரென்று ஒரு மாமியும் ஒரு குழந்தையும் வந்துவிட்டார்கள். "மாமி யாரு?" என்று அவன் அம்மாவைக் கேட்கையில், "நான் அத்தைடா, மாமி இல்லை!" என்றான் அந்த மாமி. அத்தை என்று கூப்பிட்டால்தான் பதிலே சொல்வாளாம். அவளுடைய சட்டமும் அமர்க்களமும்! அத்தையின் பெண் மட்டும் என்ன குறைந்தான்? அப்பாவியான தம்பிப் பாப்பாவைச் சீண்டுவான். தம்பிக்குக் காவலாக இருந்து பரிந்தால், "இவள் உன் பெண்டாட்டி தாண்டா" என்று சிரிக்கிறாள் அத்தைக்காரி!

வீட்டில் தொல்லை என்று மாமாவின் கடையிலேயே கூடச் சில சமயம் இருந்து விடுவான் கண்ணன். சில சமயம் வீட்டிலும் எல்லாருமாகத் தமாஷாகப் பேசுவார்கள்; சிரிப்பார்கள், வீட்டில் நிறையச் சந்தடியாகிவிட்டது.

ஒரு நாள் எல்லாருமாகச் சேர்ந்து பேசி, "கண்ணனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேணும்" என்று முடிவு கட்டினார்கள். "போகிறாயாடா கண்ணா?" என்று கொஞ்சினார்கள்.

போகிறேன் என்று ஆசையாகத்தான் கண்ணன் கிளம்பினான். அண்ணன் புறப்பட்டதுமே கிளம்பினான். ஆனால் நடந்ததென்ன? அவன் சென்ற திசைக்கே திரும்பாமல் லலிதா எதிர்த்திசையில் திரும்பினாள். கண்ணனின் நெஞ்சு துணுக்குற்றது. அம்மா இருக்கிறாளே என்று தெம்பு கொண்டான். தெருமுனை திரும்பினதும் லலிதா ஒரு வீட்டுக்குள்

நுழைந்தாள். ஓர் அறையில் சில சிறு குழந்தைகள் இருந்தன. ஒரு மாமியும் இருந்தாள். சற்றுப் பொறுத்து லலிதா, "இந்த மாமிதான் டீச்சர், கண்ணா; சமர்த்தாய்ப் படிக்க வேணும். டீச்சர் எல்லாம் சொல்லித் தருவார்" என்றாள். டீச்சர் மாமியும் அவன் கையைப் பிடித்து, அதேமாதிரி புத்தி சொன்னாள்.

"நான் போகட்டுமாடா கண்ணா? கொஞ்ச நாழி சமர்த்தா இருந்துவிட்டு வா; டீச்சர் கூட்டிக்கொண்டு வருவார்" என்று கொஞ்சினாள் லலிதா.

உடன்பாடா, கோபமா என்பதை யாரும் அறியக் கூடாத தொனியில் கண்ணன் சுவரோடு ஒட்டி உட்கார்ந்தபடி ஒரு மாதிரி பார்த்துவிட்டு, "போயேன்!" என்றான் பளிச்சென்று, "சமர்த்து" என்று சொல்லிவிட்டுப் பார்வையில் கனிவுடன் லலிதா வாசற்படி இறங்கினாள். 'ஓ! என்று அழுதுகொண்டு ஓட்டமாய் ஓடி அம்மாவைக் கட்டிக்கொண்டான் சிறுவன்.

"தினமும் ஒரு நடை அழைத்து வந்தால் பழகுவான்" என்றாள் டீச்சர் மாமி.

லலிதா வழியெல்லாம் சமாதானப்படுத்திக் கொண்டு வந்தாள். "டீச்சர் ரொம்ப நல்லவள்; மற்றக் குழந்தைகளுடன் சிநேகம் செய்து கொள்ளலாம்" என்று சொன்னாள்

"அண்ணா அங்கே இல்லையே!" என்று வாதாடினான் கண்ணன். "இத்தனையூண்டு பள்ளிக்கூடந்தானே?" என்று சொல்லிக் கட்டைவிரலையும் ஆள்காட்டி விரலையும் நுனி சேர்த்து ஒரு 'சிட்டிகை' முத்திரை காட்டினான், சிரித்துக்கொண்டே வந்தாள் லலிதா.

"கூடவே வந்துவிட்டானா?" என்று கேட்டார் தாத்தா. "புதுசல்லவா?" என்றாள் பாட்டி. எல்லாரும் நிறையச் சிரித்தார்கள்.

அவர்களுடைய சிரிப்பை நன்றாக அடக்கி ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டான் கண்ணன்.

தினமும் லலிதா அவனை இழுத்துக்கொண்டு போனாள். கண்ணன் அவளோடு திரும்பி வரவில்லை; அவளுக்கு எட்டடி முன்னாலேயே வந்துவிட்டான். லலிதா அசட்டுச் சிரிப்பும் கையில் கரும்பலகையுமாக வந்தாள், பின்னால். பஞ்சாட்சத்தின் கடைக்கு முன்புற வாசல் அந்தத் தெருவில்தான் திறக்கிறது. அவர், "டேய் கண்ணா. சமர்த்தாகப் போ" என்று அவனுக்குச் சொல்லுவதும், "இன்றைக்கும் வந்துவிட்டாயா ஓடி?" என்று விசாரிப்பதும் தினசரி நடந்தன.

அவர் குரலைக் காதில் வாங்கமாட்டான்; வீடே குறியாக ஓடுவான் கண்ணன். வீட்டில் எல்லாரும் கவலைப்பட்டார்கள்; இந்தப் பிள்ளை இப்படிப் படுத்தி வைக்கிறதே என்றுதான்.

ஒரு நாள் மாலை பஞ்சாட்சரம், " நாளைக்கு வர மாட்டேன்; ஞாயிற்றுக்கிழமை என்று ஆரம்பித்தார் கண்ணனிடம். அவருக்கு வியாபாரச் சந்தடி குறைந்தபிறகு ஏன் விடுமுறையை விடவேண்டும்?

"ஏன் வரமாட்டே?"

"நிறையப் பேர் படித்தால்தான் நான் ஞாயிற்றுக்கிழமை கடை வைக்கவேணும். உன் மாதிரி அசடாயிருந்தால், படிக்காமல் இருந்தால், புத்தகம் வாங்க வரமாட்டார்களே!"

"சாக்கலேட்டெல்லாம் வாங்குவாளே"

"மாட்டார்கள்; நிறையப் பேர் பள்ளிக் கூடத்துக்குப் போனால்தான் என் கடையைத் திறப்பேன். நீ ஏன் பள்ளிக்கூடம் போய்ப் படிக்க மாட்டேன் என்கிறாய்?"

இப்படியே அவனோடு பேசி அவனைத் தெளிய வைத்தார். அவன் சொன்ன ஆட்சேபங்களை மடக்கி அவனுக்குப் படிப்பின் முக்கியத்துவத்தை, பள்ளி என்ற இடத்தின் தன்மையை, அறிவுறுத்தினார்.

கண்ணன் படிப்படியாக மாறினான் பள்ளிக்கு அம்மாவுடன் போய், அவள் இல்லாமல் அரை மணி இருந்து பிறகு ஓடிவருகிறதில் ஆரம்பித்த மாறுதல், நாளடைவில் நன்கு திருப்திகரமாகியது.

"என்னை முரளிதரன்னு கூப்பிடறா மாமா!" என்று பெருமைப்பட்டான். "இன்னிக்கு லீவு; நாளைக்கும் லீவுதான்; திங்கட்கிழமை தான் போகணும்' என்று சொன்னான்.

'அடி சக்கை!" என்றார் பஞ்சாட்சரம். இப்பொழுதெல்லாம் அவர் தின்னக் கொடுக்கும் பண்டத்தில் கூடக் கவனக் குறைவாகிவிட்டான். கருத்துத் திசை மாறிவிட்டது விரைவிலே.

அன்றைக்கும் ஞாயிறு. கண்ணனின் வக்கீல் சிற்றப்பா பகல் பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட வந்தார்.

"ஏண்டா அப்பா இப்படி? ஞாயிற்றுக்கிழமையாவது வேளைக்குச் சாப்பிடக் கூடாதா? மற்ற நாளில் அவசரச் சாப்பாடு; இன்றைக்கு ஆறின சாப்பாடு; நான்தான் ஞாயிற்றுக்கிழமையும் பத்துமணிக்குள் முடித்துவிடுகிறேனே! உங்கள் அண்ணா. ஞாயிற்றுக் கிழமையென்று வயிறு அறியுமா, பசிக்காதா என்பான்; தினம்போலே சாப்பிடுவான், இந்த ஒரு நாளாவது நீயும் அவனும் அப்பாவும் சேர்ந்து சாப்பிடக்கூடாதா?' என்று பாட்டி அங்கலாய்த்தாள்.

கண்ணனின் அத்தை, "எங்கள் வீட்டிலே ஒரு ஞாயிற்றுக் கிழமையன்றைக்குத்தான் சேர்ந்தாற்போல எல்லாரும் ஒரே பந்தி! ரொம்ப வேடிக்கையாய் நடக்கும் சாப்பாடு" என்று பெருமை அடித்துக்கொண்டாள்.

கண்ணனின் அப்பா லலிதாவுக்கு இதெல்லாம் கவலை இல்லை ஞாயிற்றுக்கிழமை தபால்காரன் வரமாட்டான் அப்படி ஏதாவது அவசரத் தபால் வந்தாலும் அவளுடைய எழுத்தோவியம் ஏதும் திரும்பாது பார்! அது பெரிய நிம்மதி அவளுக்கு என்றார்.

"நீ என்னவோ சொல்கிறாய் எதற்காகத் தபால் ஆபீஸ் லீவு இருக்க வேணும் என்கிறேன் நான். அதனாலே ரொம்பச் சங்கடம்" என்று எதிர்த்தாள் அத்தை. அவள் கணவனின் கடிதங்கள் வர வேண்டுமே! அவளும் எழுத வேண்டுமே நிதம் ஒன்று!

கண்ணன் பார்த்தான். "எனக்குச் சனிக்கிழமையும் பிடிச்சிருக்கு; ஞாயிற்றுக்கிழமையும் பிடிச்சிருக்கு; எனக்கு லீவு!" என்று முழங்கினான். இனியும் அவன் அறியாக் குழந்தையா?

**********

(கிழமைக்கதைகள் என்ற போட்டியில் பரிசுபெற்ற கதை: கலைமகள்,செப்டம்பர், 1950 இதழில் வெளியானது)